# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

பாடம் 10

## வேதாகம கலாச்சாரமும் நவீன பிரயோகமும்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ 1
அடித்தளங்கள் ........ 2
முக்கியத்துவம் ........ 3
எதிர்ப்பு இலட்சியங்கள் ........ 7
வகை ........ 9
முன்னேற்றங்கள் ........ 13
முக்கியத்துவம் ........ 13
எதிர்ப்பு இலட்சியங்கள் ........ 15
வகை ........ 18
பிரயோகம் ........ 21
முக்கியத்துவம் ........ 21
எதிர்ப்பு இலட்சியங்கள் ........ 24
வகை ........ 26
முடிவுரை ........ 30



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

”வேதத்தின் இந்தப் பகுதி வெறும் கலாச்சாரம் அல்லவா?” என்று வேதத்தை போதிக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காலத்தில் கேட்பதைக் கேட்டிருக்கிறார்கள். வேதாகமத்தின் சில பகுதிகள் வேதாகம காலத்தின் பண்டைய கலாச்சாரங்களில் உட்பொதிந்துள்ளன, அவை இன்று நமக்குப் பொருந்தாது. எனவே, கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் நவீன வாழ்க்கைக்கு பொருந்தும் ”கலாச்சார” வேத பகுதிளை வேறுபடுத்த முயற்சிப்பதில் நிறைய நேரம் செலவிடுகிறார்கள்.

இந்த பாடத்தில், நாம் ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்தை முன்மொழியப் போகிறோம். வேதாகமத்தின் சில பகுதிகள் மட்டும் கலாச்சாரம் சார்ந்ததாகவும் நமக்கு பொருந்தக்கூடியதாகவும் இருக்கிறது என்று கருதுவதற்குப் பதிலாக, வேதத்தின் ஒவ்வொரு பகுதியும் கலாச்சாரம் சார்ந்ததாகவும் நமக்கு பொருந்தக்கூடியதாகவும் இருக்கிறது என்பதைக் காண்போம். முழு வேதாகமமும் பண்டைய கலாச்சார சூழலை பிரதிபலிக்கிறது, ஆனால் நாம் யாராக இருந்தாலும், அல்லது எங்கு அல்லது எப்போது வாழ்ந்தாலும் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வழியில் தேவனுடைய வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

*அவர் நமக்கு வேதம் கொடுத்தார்: வியாக்கியானம் செய்வதன் அடிப்படைகள்* என்கிற இந்த தொடரில் இது பத்தாவது பாடமாகும். இதற்கு ”வேதாகம கலாச்சாரமும் நவீன பிரயோகமும்”என்று தலைப்பிட்டுள்ளோம். இந்த பாடத்தில், வேதாகமத்தின் கலாச்சார பரிமாணங்கள் நவீன உலகில் வாழும் மக்கள் வேதத்தை பிரயோகிப்பதை எவ்வாறு பாதிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

முந்தைய பாடங்களில் நாம் கூறியது போல, நம் நாளில் வேத பகுதிகளைப் பயன்படுத்தும் போதெல்லாம், வேதாகமத்தின் அசல் வாசகர்களுக்கும் நவீன வாசகர்களுக்கும் இடையிலான சகாப்த, கலாச்சார மற்றும் தனிப்பட்ட இடைவெளியை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மூன்று பரிசீலனைகளையும் ஒன்றை விட்டு ஒன்றை முற்றிலுமாக பிரிக்க முடியாது என்றாலும், வேதாகமத்தின் அசல் அர்த்தத்திலிருந்து நவீன பயன்பாட்டிற்கு நகரும்போது நாம் குறிப்பாக செயல்பாட்டுக்கு வரும் கலாச்சார பிரச்சனைகளில் கவனம் செலுத்தப் போகிறோம்.

கலாச்சாரத்தை வரையறுக்க பல வழிகள் உள்ளன. ஆனால் நவீன சமூகவியல் மற்றும் மானுடவியலில் பொதுவாக தோன்றும் கண்ணோட்டங்களைப் பின்பற்றி, கலாச்சாரத்தை பின்வருமாறு வரையறுப்போம்:

> ஒரு சமூகத்தை அடையாளப்படுத்தும் கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளின் வடிவங்கள்

இந்த வரையறை குறிப்பிடுவது போல, கலாச்சாரங்கள் மொழி, கலைகள், வழிபாடு, தொழில்நுட்பம், உறவுகள் மற்றும் சமூக அதிகாரம் போன்ற பரஸ்பர வடிவங்களை உள்ளடக்கியது. இந்த வடிவங்கள் நாம் எதை நம்புகிறோம், செய்கிறோம் மற்றும் உணர்கிறோம் என்பது பற்றிய பகிரப்பட்ட கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளைக் கொண்டுள்ளன. எனவே, நாம் கலாச்சாரங்களைப் பற்றிப் பேசும்போது, அது ஒரு குடும்பம், ஒரு இனக் குழு, ஒரு சமூக அமைப்பு, ஒரு மத சங்கம், ஒரு தேசம் அல்லது முழு மனித இனமாக இருந்தாலும் இந்த அம்சங்கள் ஒரு சமூகத்தை எவ்வாறு வகைப்படுத்துகின்றன என்பதை நாம் மனதில் வைத்திருக்கிறோம்.

இந்த பாடம் வேதாகம கலாச்சாரம் மற்றும் நவீன பயன்பாட்டின் மூன்று பரிமாணங்களில் கவனம் செலுத்தும்: முதலாவதாக, வேதத்தின் ஆரம்ப அத்தியாயங்களில் காணப்படும் கலாச்சாரத்தின் வேத அடித்தளங்களை ஆராய்வோம். இரண்டாவதாக, பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் நிகழ்ந்த பல வேத கலாச்சார வளர்ச்சிகளைக் காண்போம். மூன்றாவதாக, வேதத்தின் இந்த கலாச்சார அம்சங்கள் வேதாகமத்தின் நவீன பிரயோகத்தை எவ்வாறு பாதிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம். முதலில் கலாச்சாரத்தின் அடித்தளங்களைப் பார்ப்போம்.

# அடித்தளங்கள்

கலாச்சாரத்தின் வேதாகம அடித்தளங்களை நாம் கருத்தில் கொள்ளும்போது, ஆதியாகமம் 1-11 ஐ ஆராய்வதன் மூலம் தொடங்குவோம். முதலில், இந்த அதிகாரங்கள் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை எவ்வாறு நிறுவுகின்றன என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, அவர்கள் இரண்டு முரண்பட்ட கலாச்சார இலட்சியங்களை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார்கள் என்பதில் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, வேதாகமத்தின் ஆரம்ப அதிகாரங்கள் தேவனுடைய உண்மையுள்ள ஊழியர்களிடையே கலாச்சார வேறுபாடுகளுக்கு எவ்வாறு களம் அமைத்தன என்பதை நாம் கவனிப்போம். கலாச்சாரத்தின் முக்கியத்துவத்திலிருந்து தொடங்குவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முக்கியத்துவம்

ஆதியாகமத்தின் முதல் பதினொரு அதிகாரங்கள் படைப்பு முதல் ஆபிரகாமின் நாட்கள் வரையிலான உலகத்தின் முழு வரலாற்றையும் உள்ளடக்குகின்றன. அவை நம் ஆய்வுக்கு குறிப்பாக முக்கியமானவை, ஏனென்றால் அவை உலகத்திற்கும் மனித கலாச்சாரத்திற்கும் தேவன் தந்த சிறந்த வடிவங்களை முன்வைக்கின்றன. இவ்விதமாக, ஆதியாகமத்தின் மற்ற பகுதிகளை மட்டுமல்ல, வேதாகமத்தின் மற்ற பகுதிகளையும் நாம் வாசிக்க அவை வழிகாட்டுகின்றன.

கலாச்சாரத்தின் அஸ்திபாரங்கள் முதன்முதலில் ஆதியாகமம் 1:28 இல் தோன்றுகின்றன, இது பெரும்பாலும் ”கலாச்சார ஆணை” என்று அழைக்கப்படுகிறது. இங்கே, தேவன் மனிதகுலத்திடம் இவ்வாறு கூறினார்:

> நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் (ஆதியாகமம் 1 : 28).

கலாச்சார ஆணையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும், முந்தைய பாடங்களில் நாம் கண்ட ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். வரலாற்றிற்கான தேவனுடைய இறுதி குறிக்கோள் எப்போதும் உலகத்தை அவரது கண்ணுக்குத் தெரியும் மகிமையால் நிரப்புவதாகும், இதனால் ஒவ்வொரு உயிரினமும் அவரை என்றென்றும் தொழுது கொள்ளும். தேவன் சிருஷ்டிப்பின் ஆரம்ப ஒழுங்கை நிறுவிய பிறகு, தேவனுடைய மகிமையின் இறுதி காட்சிக்கு ஆயத்தமாக சிருஷ்டிப்பை மேலும் வளர்ப்பது மனிதகுலத்தின் பொறுப்பு என்பதை கலாச்சார ஆணை சுட்டிக்காட்டியது.

> உலகம், சிருஷ்டிப்பு அவரது மகிமையால் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காக தேவன் மனிதகுலத்திற்கு மிகவும் எளிமையான சொற்களில் கலாச்சார ஆணையை வழங்கினார். ஒரு வீட்டைக் கட்டுவது போல, பழங்காலக் கோயிலைப் போல, சிருஷ்டிப்பின் சித்திரத்தைப் பார்க்கிறோம். ஒரு கோயில் கட்டப்படும்போது, அதைக் கட்டிய தெய்வம் அதில் வாசம் செய்கிறார். எனவே, சிருஷ்டிப்பு பற்றிய வேத பார்வை என்னவென்றால், பூமி முழுவதும் தேவனுடைய வசிப்பிடமாகவும், பரிசுத்த ஸ்தலமாகவும் ஆக்கப்பட்டது. ஆனால் தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒரு பறவை அல்லது சிங்கத்தின் சிலை அல்லது அது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போன்ற ஒன்றை அந்த கோவிலில் வைப்பதற்கு பதிலாக தேவன் ஆணும் பெண்ணும் தனது ரூபத்தை சுமப்பவர்களாக வைத்தார். ”நீ போய் என் சாயலை பெருக்கி, பூமியை நிரப்பி, பின்னர் அதை ஆளுகை செய், ஒரு ஆசாரியனைப் போல அதன் மீது அதிகாரம் செலுத்து” என்று பண்பாட்டு ஆணையைக் கொடுக்கும்போது தேவன் கூறினார். எனவே, தேவனுடைய சாயலைச் சுமப்பவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட உலகின் மீது தேவனின் மேலாதிக்கத்தைப் பயன்படுத்துவதற்காக, அவரது பரலோக சிம்மாசன அறையைப் போலவே, பூமியும் இருக்க வேண்டும் என்பதற்காகவே கலாச்சார ஆணை இருந்தது. எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டில், தண்ணீர் கடலை மூடுவது போல பூமி கர்த்தருடைய மகிமையால் நிறைந்திருக்கும் என்று சொல்வது புதிதல்ல, ஏனென்றால் அது தேவனுடைய அசல் வடிவமைப்பாகும்.

– Rev. மைக் குளோடோ

ஆதியாகமம் 1-ல் வேதாகமத்தின் தொடக்கத்தில், வீழ்ச்சிக்கு முன், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் ஒரு மிக முக்கியமான கட்டளை அல்லது அறிவுறுத்தல்களின் தொகுப்பை வழங்குகிறார். ஒரு உலக கண்ணோட்டத்தை அவர்களுக்கு கொடுக்கிறார், அதாவது தோட்டத்தின் அழகையும் அதன் ஒழுங்கையும் சிறப்பையும் எடுத்துச் செல்லவும், அதை உலகம் முழுவதும் பரப்பவும் கட்டளையிடுகிறார். வேதத்தின் கதையானது வீழ்ச்சி மற்றும் கட்டளைக்கு கீழ்ப்படிய தவறியதைப் பற்றியது, பின்னர் இரண்டாவது ஆதாமாகிய இயேசு கிறிஸ்து மூலம் அவரது மணவாட்டியான திருச்சபையானது அந்த ஆணையை மறுதொடக்கம் செய்வது பற்றியது. எனவே, ஆதியாகமம் 1-ன் அசல் கட்டளையான, அந்த கலாச்சார ஆணையும் சிருஷ்டிப்பு ஆணையுமாகியது, உண்மையில் வேதத்தின் செய்தியின் மையத்தில் உள்ளது, இது உண்மையில் மீட்பு பற்றியது என்று நான் பரிந்துரைக்கிறேன். ஒரு வேத அறிஞர் இரட்சிப்பை ”மீண்டும் பெறப்பட்ட சிருஷ்டிப்பு” என்று அழைத்துள்ளார். அது ஒரு அழகான காட்சிப்படம் என்று நான் நினைக்கிறேன். வேதம் எதைப் பற்றியது என்பதைப் பற்றிய அழகான விரிவான புரிதல் இது. வேதாகமத்தின் செய்தியை தேவன் தனது ஆட்சியை அல்லது அவரது

ராஜ்யத்தை, பரலோகத்திலிருந்து பூமிக்கும், சிருஷ்டிப்பிலிருந்து புதிய சிருஷ்டிப்பிற்கும் மீட்டெடுப்பதாக நான் அடிக்கடி விவரித்திருக்கிறேன். இந்த இரண்டு துருவங்களிலும், இந்த இரண்டு அச்சுக்களிலும், பரலோக யதார்த்தங்களை முழுமையாகப் பிறந்த **பூமி**க்குரிய உண்மை**களாக** மாற்றுவதற்கும், சிருஷ்டிப்பிலிருந்து புதிய படைப்பின் இறுதி இலக்கை நோக்கி தேவன் கிரியை செய்யும் தற்காலிக உணர்வை தேவன் **தருகிறா**ர். தேவன் தம்முடைய அழகையும், அவருடைய மேன்மையையும், அல்லது வேதாகம மொழியில் கூறுவதானால் ”அவருடைய மகிமையை” பூமியெங்கும் பரப்புகிறார் என்ற கருத்து அதன் மையத்தில் உள்ளது. தேவனுடைய சபையில் இருக்கிற அனைவரும் தனிநபர்களாகவும் மீட்கப்பட்ட மனிதகுலமாகவும் அழைக்கப்பட்டது இதற்குத்தான்.

– Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

”நம்முடைய சாயலில் மனிதனை உருவாக்குவோம்” என்று தேவன் சொன்னதை ஆதியாகமம் 1:26-ல் நாம் காணலாம். பண்டைய உலகில், தேசங்களின் ராஜாக்கள் தேவனுடைய சாயல் என்று அழைக்கப்பட்டனர், ஏனெனில் அவர்களின் அரச பணி தங்கள் தேவர்களின் விருப்பத்தைத் தீர்மானிப்பதும் அதற்கேற்ப தங்கள் கலாச்சாரங்களைக் கட்டமைப்பதும் ஆகும். அதன் படி, ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்கள், பூமியில் தேவனுடைய சித்தத்தை மேம்படுத்துவதற்காக இந்த வகையான ராஜ கலாச்சார சேவையைச் செய்வதற்காக அனைத்து மனிதர்களும் படைக்கப்பட்டனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

கூடுதலாக, ஆதியாகமம் 2 தேவனுடைய சித்தத்தின்படி ஒவ்வொரு கலாச்சார வளர்ச்சியும் தேவனுக்கு நாம் செய்யும் ஒரு பரிசுத்த ஆசாரிய சேவை என்று விளக்குகிறது. 15 ஆம் வசனத்தில், தேவன் ஆதாமையும் ஏவாளையும் தனது பரிசுத்த தோட்டத்தில் ”பண்படுத்தவும் காக்கவும்” வைத்தார் என்று அறிகிறோம். இந்த வெளிப்பாடு இரண்டு எபிரெய வினைச்சொற்களின் அசாதாரண கலவையாகும்: *அவத்* என்பது வழக்கமாக ”வேலை செய்ய” அல்லது ”உழைப்புக்கு” என்றும் *ஷாமர்* என்பது பொதுவாக ”கவனித்துக் கொள்ள” அல்லது ”பாதுகாக்க” என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றன. மோசே இந்த வார்த்தைகளை இந்த இடம் தவிர வேறு ஒரு முறை மட்டுமே பயன்படுத்தினார். எண் 3:8 இல் ஆசரிப்பு கூடாரத்தில் தேவனுடைய மகிமையான பிரசன்னத்திற்கு முன்பு லேவிய ஆசாரியர்களின் சேவையை விவரித்தபோது அவர் பயன்படுத்தினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எனவே, உண்மையில், ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்கள் கலாச்சாரம் என்பது நமது இருப்பின் ஒரு சிறிய பரிமாணம் அல்ல என்ற அடிப்படை வேதாகம முன்னோக்கை நிறுவுகின்றன. மாறாக, அது தேவனுக்கு நாம் செய்யும் அரச மற்றும் ஆசாரிய சேவையாகும். தம்முடைய கண்ணுக்குத் தெரியும் மகிமையின் இறுதிக் காட்சிக்கு ஆயத்தமாவதற்காக பூமியை நிரப்பவும், வளர்க்கவும், ஒழுங்குபடுத்தவும், அழகுபடுத்தவும், பரிசுத்தப்படுத்தவும் தேவன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

> தேவன் ஏன் மனிதனுக்கு கலாச்சார ஆணையைக் கொடுத்தார் என்பதைப் புரிந்துகொள்ள, மனிதன் தேவனுடைய சாயலில் தனித்துவமாக படைக்கப்பட்டான் என்பதை நினைவில் கொள்வது முக்கியம் என்று நான் நினைக்கிறேன். எனவே தேவனுடைய சாயலுக்கு ஒரு கட்டமைப்பு கூறு உள்ளது. நாம் தேவனுடைய சாயலில் இருக்கிறோம். ஆனால், நாம் செய்யும் வேலையின் மூலம் அவருடைய மகிமையைப் பிரதிபலிப்பதால் மனிதனாக இருக்கும் நமக்குச் சரியான விதத்தில் தேவனுடைய மகிமையைக் காண்பிக்கும் செயல்பாட்டு அம்சமும் உள்ளது. எனவே கலாச்சார ஆணையைப் பற்றி நாம் சிந்திக்கும் போது, பூமியை நிரப்புவதற்கும், அதை அடக்குவதற்கும், ஏதேன் தோட்டத்தைப் போல உலகை உருவாக்குவதற்கும், அதை நிரப்புவதற்கும், அதை மக்கள்தொகைப்படுத்துவதற்கும் நமக்கு ஒரு வேலை உள்ளது. எனவே, மனித உருவில் தனித்துவமாகக் காட்சியளிக்கும் தேவனுடைய மகிமையை அவரது மகிமைக்காக பூமியின் கடைக்கோடி வரை பரப்புவதற்கான கலாச்சார ஆணையை நாம் செயல்படுத்த வேண்டும் என்பதே இதன் கருத்து.
>
> – Dr. புரூஸ் பாகஸ்

கலாச்சார முக்கியத்துவத்தின் வேத அடித்தளங்களை நாம் இப்போது பார்த்தோம், வரலாறு முழுவதும் மனிதர்களால் பின்பற்றப்படும் இரண்டு முரண்பட்ட கலாச்சார இலட்சியங்களின் வேதாகம அடித்தளங்கள் என்கிற இரண்டாவது பிரச்சனையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# எதிர்ப்பு இலட்சியங்கள்

உலகின் பல்வேறு பகுதிகளுக்கு நாம் பயணிக்கும்போது, மக்கள் வெவ்வேறு வழிகளில் விஷயங்களைச் செய்ய நிறைய இடம் உள்ளது என்பதை நினைவூட்டுவது சரியே. நாம் அனைவரும் தெருவின் ஒரே பக்கத்தில் வாகனம் ஓட்டவோ, ஒரே மொழியைப் பேசவோ அல்லது ஒரே வகையான ஆடைகளை அணியவோ தேவையில்லை. ஆயினும்கூட, கலாச்சாரம் ஒருபோதும் தார்மீக ரீதியாக நடுநிலையாக இருப்பதில்லை என்பதை ஆதியாகமம் முதல் அதிகாரங்கள் தெளிவுபடுத்துகின்றன. மாறாக, ஒவ்வொரு கலாச்சாரத்தின் ஒவ்வொரு வளர்ச்சியும் ஏதோ ஒரு வகையில் தேவனை அதிருப்தியடையச் செய்கிறது அல்லது மகிழ்ச்சிப்படுத்துகிறது, ஏனெனில் அது இரண்டு முரண்பட்ட கலாச்சார இலட்சியங்களில் ஒன்றைப் பிரதிபலிக்கிறது.

மனிதர்கள் பல வழிகளில் பண்பாட்டை வளர்த்துக் கொண்டார்கள் என்பதை வேதாகம ஆசிரியர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆனால் அவர்களின் கண்ணோட்டத்தில், அனைத்து கலாச்சாரங்களும் தேவனுக்கு சேவை செய்யும் கலாச்சார வடிவங்கள் மற்றும் அவரை எதிர்க்கும் கலாச்சார வடிவங்கள் ஆகிய இரண்டு அடிப்படை வகைகளில் ஒன்றாகும்.

நாம் இன்று வேதத்தைப் பயன்படுத்தும்போது இந்த கலாச்சார வேறுபாடுகள் மிகவும் முக்கியமானவையாகின்றன என்பதை நாம் பின்னர் காண்போம். ஆனால் இப்போதைக்கு, வேதத்தின் ஆரம்ப அதிகாரங்களில் இந்த பிரிவு முதன்முதலில் எவ்வாறு நிறுவப்பட்டது என்பதைக் கவனிப்போம்.

ஆதியாகமம் 3-ல் ஆதாமும் ஏவாளும் நன்மை தீமைகளை அறியும் மரத்தின் கனியை உண்பதன் மூலம் தேவனுக்கு விசுவாசமாக இருப்பதற்கான சோதனையில் தோல்வியுற்றனர். இதற்குப் பிறகு, அவர்கள் பாவத்தில் விழுவது மனிதர்களை இரண்டு தனித்துவமான கலாச்சார பாதைகளைப் பின்பற்ற வழிவகுக்கும் என்று தேவன் சொன்னார். ஆதியாகமம் 3:15-ல் தேவன் சர்ப்பத்திடம் சொன்னபோது, இந்த இரண்டு கலாச்சாரத் தேடல்களையும் விவரித்த விதத்தைக் கவனிக்கவும்:

> உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார் (ஆதியாகமம் 3:15).

சுருக்கமாக, இங்கே குறிப்பிடப்பட்டுள்ள "ஸ்திரீ" ஏவாள் ஆவாள். தேவன் படைத்த முதல் பெண். சர்ப்பம் சாத்தானைக் குறிக்கிறது.

வரலாறு நெடுகிலும் மனிதப் பண்பாட்டின் சிறப்பியல்புகளை இந்த பகுதி நிறுவுகிறது. அந்த ஸ்திரீயின் சந்ததிகள் தேவனுக்கு உண்மையாக சேவை செய்ய முயன்றிருக்கிறார்கள். சர்ப்பத்தின் சந்ததி அவரை எதிர்க்க முனைந்துள்ளது. ஏவாளின் மகத்தான சந்ததியான கிறிஸ்து சாத்தானுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிரான தனது இறுதி வெற்றியை முடிக்கத் திரும்பும் வரை இந்த பிரிவு மனித கலாச்சாரத்தை அடையாளப்படுத்தும்.

இந்த இரண்டு பாதைகளும் உடனடியாக ஆதியாகமம் 4-ல் உள்ள காயீன் மற்றும் ஆபேலின் கதையில் தோன்றுகின்றன. நான்காம் அதிகாரத்தின் முடிவில், காயீனும் அவரது சந்ததியினரும் சர்ப்பத்தின் சந்ததியாக எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதைப் பார்க்கிறோம். அவர்கள் மிகவும் அதிநவீன கலாச்சாரங்களை உருவாக்கினர், ஆனால் தேவ சித்தத்தை எதிர்க்கும் நோக்கத்துடனும், தங்கள் இயல்பான சந்ததியை தங்கள் ஆவிக்குரிய தந்தையாக பிசாசுக்காக பரிமாறிக் கொள்ளும் நோக்கத்துடனும் இருந்தனர்.

ஆனால் ஆதியாகமம் 5-ல் சேத்தின் சந்ததியினர் ஸ்திரீயின் சந்ததியாக கலாச்சாரத்தை வளர்த்தெடுத்ததை நாம் காண்கிறோம். அவர்கள் குடும்பங்களையும் கோத்திரங்களையும் உருவாக்கினர். அவர்கள் மத நடைமுறைகளையும் மொழியையும் வளர்த்தனர். அவர்கள் பரிபூரணமானவர்கள் அல்ல, ஆனால் தேவனுக்கு சேவை செய்யும் மற்றும் மகிமைப்படுத்தும் கலாச்சார வடிவங்களை நிறுவ அவர்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்தனர். இந்த புள்ளியில் இருந்து, இந்த இரண்டு முரண்பட்ட கலாச்சார இலட்சியங்களை வேத வசனம் வேறுபடுத்திக் காட்டுகிறது.

இப்போது நாம் இந்த இடத்தில் கவனமாக இருக்க வேண்டும். வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும், மனித கலாச்சாரத்தின் இந்த இரண்டு பாதைகளுக்கும் இடையே பல ஒற்றுமைகள் இருப்பதையும் நாம் பார்க்க வேண்டும். காயீனும் ஆபேலும் இயற்கையை அடக்கியாள முயன்றதாக ஆதியாகமம் 4 மற்றும் 5 குறிப்பிடுகின்றன. அவர்கள் இருவரும் சமூகங்களையும் மத நடைமுறைகளையும் வளர்த்தனர். மேலும், சேத் மற்றும் காயீனின் வம்சாவளிகள் காட்டுவது போல, இருவரும் திருமணமாகி குழந்தைகளைப் பெற்றனர்.

இத்தகைய வெவ்வேறு பண்பாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றும் மக்களால் எப்படி ஒரே மாதிரியான பண்பாட்டு வெளிப்பாடுகளை வளர்த்துக் கொள்ள முடிந்தது? இந்த ஒற்றுமைகள் இரண்டு காரணங்களுக்காகத் தோன்றின என்பதை வேதாகமத்தின் மற்ற பகுதிகளிலிருந்து நாம் அறிகிறோம்.

ஒருபுறம், தேவனுடைய பொதுவான கிருபையும் மனிதகுலத்தின் மீது அவர் காட்டுகிற போது இரக்கமும், சாத்தானையும் அவனைப் பின்பற்றுபவர்களின் பாவப் போக்குகளையும் கட்டுப்படுத்துகிறது. இதன் விளைவாக, உலகின் மிகக் கொடூரமான கலாச்சாரங்கள் கூட தேவனுடைய சித்தத்திற்கு ஒரளவு இணக்கத்தை வெளிப்படுத்தியுள்ளன. மறுபுறம், தேவனுடைய வழிகளைப் பின்பற்றுபவர்களை பாவம் தொடர்ந்து சீரழிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எனவே, உலகின் பரிசுத்தமான கலாச்சாரங்கள் கூட தேவனுடைய சித்தத்தை முழுமையாகக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டன.

காயீன், ஆபேல் காலத்திலிருந்து நம்முடைய நாள் வரை, தேவனுடைய உண்மையுள்ள ஊழியர்களின் கலாச்சார முயற்சிகளுக்கும் அவருக்கு எதிராக கலகம் செய்பவர்களுக்கும் இடையே எப்போதும் வேறுபாடுகளும் ஒற்றுமைகளும் உள்ளன. வேதாகமத்தின் எந்தப் பகுதியையும் இன்று நாம் பிரயோகிக்க முற்படும்போது, இந்த கலாச்சார வேறுபாடுகளை மனதில் கொள்வது முக்கியம்.

கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தின் வேதாகம அடித்தளங்களை ஆராய்ந்து இரண்டு முரண்பட்ட கலாச்சார இலட்சியங்களை நிறுவிய பின்னர், நாம் இப்போது மூன்றாவது காரணியான 'வேதாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில் கலாச்சார பன்முகத்தன்மையை தேவன் அங்கீகரித்துள்ளார்' என்பதைப் பார்ப்போம்.

## வகை

ஆதியாகமத்தின் முதல் அதிகாரங்கள் முதன்மையாக சில தனிப்பட்ட மனிதர்களைப் பற்றிப் பேசுகின்றன. எனவே, வேதத்தின் இந்தப் பகுதியில் சமூகங்கள் கலாச்சார பன்முகத்தன்மையைக் காட்டியதற்கான எடுத்துக்காட்டுகள் எதுவும் இல்லை. அப்படியிருந்தும், ஆதியாகமத்தின் முதல் அதிகாரங்களில் தேவன் ஆரம்பகால மனித வரலாற்றில் தனிப்பட்ட மக்களுக்கு தனது சித்தத்தை வெளிப்படுத்திய வழிகளில் கலாச்சார வேறுபாடுகளுக்கு களம் அமைத்தார்.

கலாச்சார பன்முகத்தன்மையின் அடித்தளங்களை விவரிக்க பல வழிகள் உள்ளன, ஆனால் காலத்திற்காக கலாச்சார பன்முகத்தன்மை "விசேஷித்த வெளிப்பாடு" மூலம் எவ்வாறு வளர்ந்தது என்பதையும், நாம் பொதுவாக "பொதுவான வெளிப்பாடு" என்று அழைப்பதையும் கருத்தில் கொள்வோம்.

"விசேஷித்த வெளிப்பாடு" என்பது சொப்பனங்கள், தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள், வேதாகமங்கள் மற்றும் பிற ஒத்த வழிமுறைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மக்களுக்கு தேவன் தன்னைப் பற்றியும் அவரது சித்தத்தைப் பற்றியும் வெளிப்படுத்துவதைக் குறிக்க பாரம்பரிய இறையியலாளர்கள் பயன்படுத்தும் சொல்லாகும். எடுத்துக்காட்டாக, ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில், ஆதாம், ஏவாள், காயீன், ஆபேல், நோவா ஆகியோருக்கு தேவன் வாய்மொழியாக தன்னை வெளிப்படுத்தினார்.

மறுபுறம், "பொதுவான வெளிப்பாடு" என்பது மனித ஆளுமைகள், சரீர மற்றும் ஆவிக்குரிய திறன்கள் மற்றும் பிற குணங்கள் மற்றும் சூழ்நிலைகளில் - வெளிப்புற, கவனிக்கக்கூடிய உலகில், தன்னைப் பற்றியும்

அவரது சித்தத்தைப் பற்றியும் தேவன் வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது. சங்கீதம் 19, ரோமர் 1:18-20 போன்ற வசனங்களில் இதைக் காண்கிறோம்.

தேவனுடைய விசேஷமான மற்றும் பொதுவான வெளிப்பாட்டைப் பயன்படுத்துவது, தேவன் தம்முடைய ஜனங்களிடையே கலாச்சார வேறுபாட்டிற்கு எவ்வாறு களம் அமைத்தார் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

தேவனுடைய உண்மையுள்ள மக்கள் வெவ்வேறு சூழ்நிலைகளில் எதிர்கொள்ளும் வெவ்வேறு மக்களாக இருந்ததால், ஒரே நேரத்தில் கூட, ஒரே விசேஷித்த வெளிப்படுத்தலுக்கு வெவ்வேறு வழிகளில் கீழ்ப்படிந்த விதத்தில் இதை நாம் காண்கிறோம். உதாரணமாக, ஆதாமும் ஏவாளும் ஆதியாகமம் 1:28-ல் கலாச்சார ஆணையின் விசேஷித்த வெளிப்பாட்டைப் பெற்றனர். ஆனால் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வெவ்வேறு திறமைகள், ஆளுமைகள், உடல் திறன்கள் இருந்தன. அவர்கள் வெவ்வேறு தனிப்பட்ட சூழ்நிலைகளையும் கையாண்டனர். ஆதாமும் ஏவாளும் தங்களுக்குள் எந்த அளவுக்கு இந்த வகைகள் தோன்றினாலும், ஆதாமும் ஏவாளும் ஒரே நேரத்தில் வெவ்வேறு வழிகளில் கலாச்சார ஆணையின் விசேஷித்த வெளிப்பாட்டை தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டியிருந்தது.

கூடுதலாக, சம்பந்தப்பட்ட மக்கள் மற்றும் சூழ்நிலைகளில் நடந்து வரும் மாற்றங்கள் காரணமாக மனிதகுலம் பெரும்பாலும் காலப்போக்கில் ஒரே விசேஷித்த வெளிப்பாட்டை பல்வேறு வழிகளில் பயன்படுத்தியது. ஒரு எடுத்துக்காட்டாக, தேவன் முதன்முதலில் கலாச்சார ஆணையைக் கொடுத்தபோது, பாவம் உலகில் நுழையவில்லை. ஆனால் ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்த பிறகு, அவர்களும் அவர்களுடைய சூழ்நிலைகளும் மாறின, இதன் விளைவாக, அவர்கள் கலாச்சார கட்டளைக்கு கீழ்ப்படிந்த விதமும் மாறியது. உண்மையில், ஆதியாகமம் 3-ல் உள்ள விசேஷித்த வெளிப்பாடு, காலமும் மனிதநேயமும் முன்னேறும்போது வலியும் பயனற்ற தன்மையும் கலாச்சார ஆணையை நிறைவேற்றுவதை எவ்வாறு சிக்கலாக்கும் என்பதை வெளிப்படுத்தியது.

காலப்போக்கில் தேவன் ஒன்றன்பின் ஒன்றாக ஒரு விசேஷித்த வெளிப்பாட்டைச் சேர்த்ததால், அதே விதமான வகைகள் மீண்டும் மீண்டும் தோன்றுவதை நாம் காணலாம். ஒவ்வொரு புதிய விசேஷித்த வெளிப்பாடும் ஏதோ ஒரு வகையில் முந்தைய விசேஷித்த வெளிப்பாடுகளின் தேவைகளை மாற்றியமைத்தது. எனவே, ஒவ்வொரு முறையும் தேவன் புதிய விசேஷித்த வெளிப்பாடுகளைக் கொடுக்கும்போது, அவருடைய உண்மையுள்ள மக்கள் ஒரே நேரத்தில் மற்றும் காலப்போக்கில் அவருக்கு எவ்வாறு சேவை செய்தார்கள் என்பதை மாற்றுவதன் மூலம் பதிலளிக்க வேண்டியிருந்தது.

ஆரம்பத்திலிருந்தே, விசேஷித்த மற்றும் பொதுவான வெளிப்பாடுகள் ஆரம்பகால மனிதர்கள் தேவனுக்கு சேவை செய்யும் வழிகளில் அனைத்து வகையான வேறுபாடுகளுக்கும் வழிவகுத்தன. இந்த பாடத்தில் நாம் பின்னர் காண்பது போல, இந்த ஆரம்ப வகை வேத வரலாறு முழுவதும் இன்று தேவனுடைய உண்மையுள்ள மக்களின் சமூகங்களுக்கு கலாச்சார பன்முகத்தன்மையின் அடித்தளங்களை அமைத்தது.

> ஆதியாகமத்தில் உள்ள பண்பாட்டு ஆணை நாம் பயனுள்ளவர்களாகவும் பெருகவும், பூமியை நிரப்பவும், அதன் மீது ஆதிக்கம் செலுத்தவும் கோருகிறது. அது கலாச்சார பன்முகத்தன்மைக்கு வழிவகுக்கும். அது உண்மையில் தேவனுடைய வடிவமைப்பின் ஒரு பகுதியா என்ற கேள்வி எழலாம். வெவ்வேறு கலாச்சாரங்களுக்கு இடையில் பன்முகத்தன்மை இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா? வேதாகமத்தின் போதனை முற்றிலுமானது என்று நான் கூறுவேன். இது தேவன் நம்மைச் செய்யத் தொடங்க அழைக்கும் செயலாகும்… பன்முகத்தன்மைக்கான ஒரு சூழலில் அவர் நம்மைப் படைத்தார்: வறண்ட நிலம் மட்டுமல்ல, கடலும் இருக்கிறது. சூரியன் மட்டுமல்ல, வேறு வகையான நட்சத்திரங்களும் உள்ளன. பறவைகள் மட்டுமல்ல, எல்லா வகையான விலங்குகளும் உள்ளன. மனிதனாக இருப்பது மட்டுமல்ல, ஆணும் பெண்ணும் இருக்கிறார்கள். இவ்வாறாகப் படைத்த அந்த தேவனுடைய சாயலை அவரது படைப்புகள் அனைத்திலும் விரிவுபடுத்தும்போது, நிச்சயமாக நாம் அந்த வகையான பன்முகத்தன்மையை பிரதிபலிக்க வேண்டும், அது வெவ்வேறு கலாச்சார நடைமுறைகளிலும் விஷயங்களிலும் காட்டப்படும். நாம் சொல்லும் மற்றொரு விஷயம் என்னவென்றால், தேவன் முழு பூமியையும் தனது மகிமையால் நிரப்ப நம்மை அழைக்கிறார், அதைச் செய்யும்போது, நாம் பலவிதமான காலநிலை, பல்வேறு நிலப்பரப்பு போன்ற விஷயங்களை சந்திக்கப் போகிறோம். பூமத்திய ரேகையில் நீங்கள் ஒரு பனிக்குகையை நன்றாக உருவாக்க முடியாது, மேலும் அலாஸ்காவில் புல் குடிசைகளை அமைக்க முடியாது. எனவே, நாம் பூமி முழுவதையும் நிரப்பி, முழு பூமியையும் ஆளும்போது, மீட்கப்பட்டவர்கள் அனைத்து கோத்திரம், மொழி மற்றும் தேசத்தைச் சேர்ந்த மக்களாக இருப்பார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் சொல்லுகிற இந்த வகையான

வேறுபாடு இயல்பாகவே பிரதிபலிக்கப் போகிறது. இது ஆரம்பத்திலிருந்தே தேவனின் நோக்கத்திலிருந்து விலகுவது அல்ல. ஆதியாகமம் 1-ல் தேவன் கட்டளையிட்டதை நிறைவேற்றுவதுதான் அது.

– Dr. ஜிம்மி அகன்

உலகில் தேவனின் கிரியையினுடைய அழகின் ஒரு பகுதி என்னவென்றால், அவர் ஒரு கலாச்சாரத்தில் மட்டுமல்ல, பல கலாச்சாரங்களில் செயல்படுகிறார். வேதத்தில் அதை நாம் நிறைய உறுதிப்படுத்துகிறோம் என்று நான் நினைக்கிறேன். சுவிசேஷத்தின் பிரகடனம் அனைத்து தேசங்களுக்கும், அதாவது, உலகின் அனைத்து இனங்களுக்கும், அனைத்து மக்கள் குழுக்களுக்குமானது. நீங்கள் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தின் இறுதி பாகத்தை அடையும்போது, பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையை தேவனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுவருவதைப் பற்றி வேதம் பேசுகிறது; வெவ்வேறு கலாச்சாரங்களின் இந்த பொக்கிஷங்கள் மற்றும் உலகின் பல்வேறு கலாச்சாரங்களில் நாம் காணும் தனித்துவமான பலங்கள் மற்றும் கொடைகள் அனைத்தும் மனிதகுலத்திற்கான அவரது நோக்கங்களின் ஒரு பகுதியாக தேவன் ஒரு மீட்பு வழியில் பயன்படுத்தும் விஷயங்களாகும். கிறிஸ்துவின் சரீரத்தில் கலாச்சாரங்களுக்கு அப்பாற்பட்ட உறவுகளைக் கொண்டிருப்பது நமக்கு மிகவும் முக்கியம் என்று நான் நினைப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும், இதனால் உலகின் வெவ்வேறு கலாச்சாரங்கள் வழியாக தேவனுடைய கிரியையின் முழு ஐசுவரியத்திலிருந்தும் நாம் பயனடைய முடியும்.

– Dr. பிலிப் ரைகென்

வேதாகம கலாச்சாரம் மற்றும் நவீன பயன்பாட்டுடன் அதன் உறவை ஆராய, கலாச்சாரத்தின் வேதாகம அடித்தளங்களை மட்டுமல்லாமல், பழைய மற்றும் புதிய ஏற்பாடு முழுவதும் கலாச்சாரத்தின் வேதாகம வளர்ச்சிகளையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னேற்றங்கள்

வேதத்தில் கலாச்சாரத்தின் வேத வளர்ச்சிகளை சுருக்கமாகக் கூற பல வழிகள் உள்ளன, ஆனால் நம் நோக்கங்களுக்காக, கலாச்சாரத்தின் அடித்தளங்களை ஆராய நாம் பயன்படுத்திய அதே கண்ணோட்டத்தின் மூலம் இந்த கலாச்சார வளர்ச்சிகளைப் பார்ப்போம். வேதாகம வரலாற்று வளர்ச்சியின் வெளிச்சத்தில் பண்பாட்டின் முக்கியத்துவத்தை முதலில் பார்ப்போம். பின்னர், வேதத்தில் இரண்டு எதிரெதிர் கலாச்சார இலட்சியங்கள் எவ்வாறு வளர்ந்தன என்பதைப் பார்ப்போம். இறுதியாக, வேதாகமத்தில் கலாச்சார வேறுபாடு எவ்வாறு உருவானது என்பதை ஆராய்வோம். கலாச்சாரத்தின் முக்கியத்துவத்திலிருந்து தொடங்குவோம்.

## முக்கியத்துவம்

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கலாச்சாரம் முக்கியமானது, ஆனால் பழைய ஏற்பாட்டில் கலாச்சாரத்தின் முக்கியத்துவமானது ஒரு தேசமாக இஸ்ரவேலுக்கு ஆரம்பகால வேதாகமங்கள் கொடுக்கும் கவனத்தின் அளவில் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஆதியாகமம் புத்தகம் இஸ்ரவேல் ஒரு தேசமாக ஆவதற்கு முந்தைய கலாச்சார வளர்ச்சிகளை விவரிக்கிறது, ஆனால் வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களும் இஸ்ரவேல் எகிப்தை விட்டு வெளியேறி சீனாய் மலையில் ஒரு தேசமாக ஒன்று கூடிய பிறகு மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் சகாப்தத்தின் போது எழுதப்பட்டது. இந்த காரணத்திற்காக, இந்த புத்தகங்கள் இஸ்ரவேலின் தேசிய வாழ்க்கைக்கான தேவனுடைய கட்டளைகள் மற்றும் அறிவுறுத்தல்களில் அதிக கவனம் செலுத்துகின்றன.

யோசுவா முதல் மல்கியா வரையிலான பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகள் தாவீதின் ராஜ உடன்படிக்கையின் சகாப்தத்தில், இஸ்ரவேல் ஒரு முழுமையான வளர்ச்சியடைந்த தேசமாக மாறிய பின்னர் எழுதப்பட்டன. இஸ்ரவேலின் கலாச்சாரம் ஏகாதிபத்திய மகிமையை அடைந்தபோது அதை வழிநடத்திய தேவனுடைய வெளிப்பாடுகள், பிளவுபட்ட ராஜ்யத்தின் ஏற்ற இறக்கங்கள், சிறையிருப்பு மற்றும் பழைய ஏற்பாட்டின் முடிவில் மறுசீரமைப்பின் குறுகிய காலம் ஆகியவற்றை இந்த புத்தகங்கள் குறிப்பிடுகின்றன.

பழைய ஏற்பாடு இஸ்ரவேலில் நிகழ்ந்த பல கலாச்சார வளர்ச்சிகளை விவரித்தாலும், பழைய ஏற்பாட்டில் இருந்து கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையின் சகாப்தத்திற்கு மாறியபோது வேதாகமத்தில் மிகப்பெரிய கலாச்சார வளர்ச்சி ஏற்பட்டது. இஸ்ரவேலின் தேசிய கலாச்சாரத்தில் கவனம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செலுத்துவதற்கு பதிலாக, புதிய ஏற்பாடு கிறிஸ்தவ திருச்சபையில் கலாச்சார வடிவங்களின் வளர்ச்சிகளில் கவனத்தை ஈர்க்கிறது.

இந்த வியத்தகு மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள, முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்தில் பெரும்பாலான யூதர்கள் புதிய உடன்படிக்கை யுகத்தின் வருகையை எதிர்பார்த்தனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். முந்தைய பாடத்தில் நாம் கற்றுக்கொண்டது போல, இடைப்பட்ட காலத்தில் யூத குருமார்கள் மேசியாவின் வருகைக்கு முந்தைய வரலாறு முழுவதையும் ”இந்த யுகம்” என்று குறிப்பிட்டனர். மேசியா தோன்றும்போது அவர் ”வரவிருக்கும் யுகத்தை” கொண்டுவருவார் என்று அவர்கள் போதித்தார்கள். வரவிருக்கும் யுகத்தில், மேசியா தோன்றி, உலகின் தீய தேசங்களுக்கு எதிரான போரில் தனது மக்களை வழிநடத்துவார் என்றும், இஸ்ரவேலின் கலாச்சாரத்தை வியத்தகு மற்றும் தீர்க்கமாக மாற்றும் தனது மகிமையான, உலகளாவிய ராஜ்ஜியத்தில் தனது மக்களை விரைவாக நிறுவுவார் என்றும் அவர்கள் நம்பினர்.

ஆனால் இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் அவருடைய ஆட்சி அவருடைய முதல் வருகையில் அவருடைய ராஜ்யத்தின் தொடக்கம், திருச்சபை வரலாறு முழுவதும் அவரது ராஜ்யத்தின் தொடர்ச்சி, மற்றும் அவரது இரண்டாவது வருகையில் அவரது ராஜ்யத்தை நிறைவு செய்தல் ஆகிய மூன்று நிலைகளில் விரிவடையும் என்பதை தெளிவுபடுத்தினர். இந்த மூன்று கட்ட கண்ணோட்டம் புதிய உடன்படிக்கை காலத்தில் தனது மக்களின் கலாச்சாரம் வளர்ச்சியடைய வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்த வழிகளைப் பற்றிய ஒரு புதிய புரிதலுக்கு வழிவகுத்தது.

வெளிப்படுத்தின விசேஷம் 11:15 போன்ற வேத பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளபடி கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் இறுதி இலக்கை நாம் மனதில் கொள்ளாவிட்டால், புதிய ஏற்பாட்டில் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை இழப்பது மிகவும் எளிது:

> உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார் (வெளிப்படுத்தின விசேஷம் 11:15).

இந்த பகுதியில், கிறிஸ்து ஒரு நாள் அதன் பல கலக கலாச்சாரங்களுடன் ”உலக ராஜ்யத்தை” அழிப்பார் என்பதை நாம் காண்கிறோம். ஆனால் இந்த தீய கலாச்சாரங்களை அவர் வெறுமனே அழிக்க மாட்டார். ”நம்முடைய கர்த்தருடைய ராஜ்யம் மற்றும் அவருடைய கிறிஸ்துவின் ராஜ்யம்” என்று விவரிக்கப்படக்கூடிய ஒரு உலகளாவிய கலாச்சாரமாகவும் அவர் உலகை மாற்றுவார், அங்கு ”அவர் என்றென்றும் ஆட்சி செய்வார்.”



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எனவே, புதிய ஏற்பாட்டின் ஒரு சிறிய அங்கமாக இருப்பதை விட, கலாச்சாரம் மிகவும் முக்கியமானது, வேதாகமத்தின் இந்த பகுதியின் ஒவ்வொரு பகுதியும் மனித கலாச்சாரத்திற்கான தேவனுடைய நோக்கங்களை கிறிஸ்து எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்பதைக் கையாள்கிறது.

சில பகுதிகள் இயேசு தனது வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் ஆவியின் வெளிப்பாடு ஆகியவற்றின் மூலம் கலாச்சார ஆணையின் இறுதி கட்டத்தை எவ்வாறு இயக்கினார் என்பதில் கவனம் செலுத்துகின்றன. புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகள் திருச்சபையை வழிநடத்துவதில் கவனம் செலுத்துகின்றன, ஏனெனில் இது கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது சுவிசேஷத்தின் மூலம் உலகை மாற்ற உதவுகிறது. இன்னும் சில பகுதிகள் மனிதகுலத்திற்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற கிறிஸ்து எப்போது திரும்புவார் என்பதையும், பரலோகத்தில் இருப்பதைப் போலவே பூமியிலும் தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்படும் ஒரு கலாச்சாரத்தை நிறுவுவதையும் அழுத்தமாக கூறுகின்றன.

வேதாகம வரலாற்றின் வளர்ச்சியில் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தைப் பார்ப்பதன் மூலம் கலாச்சாரத்தில் வேதாகம முன்னேற்றங்களை நாம் இப்போது ஆராய்ந்துள்ளோம், வேதம் முழுவதும் காணப்படும் இரண்டு முரண்பட்ட கலாச்சார இலட்சியங்களின் வளர்ச்சிக்கு நாம் திரும்பலாம்.

## எதிர்ப்பு இலட்சியங்கள்

ஆதியாகமம் 3-ல் உள்ள இரண்டு கலாச்சார இலட்சியங்களை நிறுவியதால் பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் சர்ப்பத்தின் சந்ததியை புறஜாதியினருடனும், ஏவாளின் சந்ததியை இஸ்ரவேலுடனும் தொடர்புபடுத்த வழிவகுத்தது.

புறஜாதி தேசங்கள் போலி தேவர்களுக்குச் சேவை செய்யும் வகையில் தங்கள் கலாச்சாரங்களை வளர்த்து, இஸ்ரவேலின் தேவனை எதிர்த்தன. அவர்கள் இந்த போலி தேவர்களுக்கு சன்னதிகளையும் கோயில்களையும் அமைத்தனர், சில நேரங்களில் தங்கள் சொந்த குழந்தைகளையும் பலி கொடுத்தனர். இந்த நடைமுறைகளுடன் தனது மக்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று தேவன் தெளிவுபடுத்தினார்.

மறுபுறம், இஸ்ரவேல் மோசேயின் மூலம் தேவன் கொடுத்த நீதியான சட்டங்களை ஏற்றுக்கொண்டு, ஒரே உண்மையான தேவனை மகிமைப்படுத்தும் வழிகளில் வாழ முயற்சித்தது. அவர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடித்தனர், உருவ வழிபாட்டைத் தவிர்த்தனர், மனித ஞானத்தையும் வலிமையையும்

நம்புவதற்குப் பதிலாக தேவனுடைய வழிகாட்டுதலையும் பாதுகாப்பையும் நம்பினர்.

நிச்சயமாக, புறஜாதிகள் தேவனுக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதிமொழி எடுப்பதன் மூலம் இஸ்ரவேல் தேசத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்றோ அல்லது இஸ்ரவேலர்கள் தேவனுடைய எதிரிகளாக மாறும் அளவுக்கு ஊழல் செய்ய முடியாது என்றோ இது அர்த்தப்படுத்தவில்லை. ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் வழமையான இலட்சியங்களைப் பின்பற்றும் அளவுக்கு, இஸ்ரவேல் தேவனுக்கு சேவை செய்வதில் அதன் கலாச்சாரத்தை வளர்த்துக் கொண்டது, புறஜாதி நாடுகள் பொய்யான தேவர்களுக்கு சேவை செய்வதில் தங்கள் கலாச்சாரங்களை வளர்த்தன.

இப்போது, அதே நேரத்தில், பழைய ஏற்பாடும் தொல்பொருள் ஆராய்ச்சிகளும் இஸ்ரவேலர் மற்றும் புறஜாதி கலாச்சாரங்கள் பல வழிகளில் ஒத்திருந்தன என்பதைக் குறிக்கின்றன. இந்த ஒற்றுமைகளில் சில இஸ்ரவேலர்கள் தங்கள் அண்டை அயலாரின் பாவப் பாதைகளைப் பின்பற்றியதால் விளைந்தன. ஆனால் பிற ஒற்றுமைகள் புறஜாதியினரின் பாவப் போக்குகளைக் கட்டுப்படுத்தும் தேவனுடைய பொதுவான கிருபையால் விளைந்தன, இதனால் அவர்களின் கலாச்சாரங்களின் அம்சங்கள் மேலோட்டமாக தேவனுடைய சித்தத்திற்கு உண்மையாக இருந்தன. இந்தப் பண்பாட்டுப் பிளவுகள் பழைய ஏற்பாடு முழுவதிலும் தொடர்ந்தன.

நாம் புதிய ஏற்பாட்டை நோக்கித் திரும்பும்போது, இரண்டு எதிரெதிர் கலாச்சார இலட்சியங்கள் ஆனால் வெவ்வேறு தொடர்புகளுடன் மீண்டும் தோன்றுகின்றன.

பழைய ஏற்பாட்டில் தொடங்கிய இஸ்ரவேலின் நீண்டகால துரோகம், கிறிஸ்துவின் அவதாரத்தின் போது விசுவாசமுள்ள யூதர்களில் ஒரு சிலரை மட்டுமே விட்டுச்சென்றது. புதிய ஏற்பாட்டில், புறஜாதியினர் இப்போது இந்த மீதியானவர்களுடன் தேவனுடைய மக்களாக முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படலாம். எனவே, யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையில் பிளவுபடுவதற்குப் பதிலாக, புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை ஸ்திரீயின் வித்துடனும், அவிசுவாசிகளை அவர்கள் யூதர்களாகவோ அல்லது புறஜாதிகளாகவோ இருந்தாலும் சர்ப்பத்தின் வித்துடனும் தொடர்புபடுத்தினர்.

அதனால்தான் யோவான் 8:44-ல் சாத்தானை பரிசேயர்களின் பிதா என்று இயேசு சொன்னார். ரோமர் 16:20-ல், தேவன் சாத்தானை அவர்களுடைய காலடியில் நசுக்குவார் என்று ரோமிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உறுதியளித்தபோது, ஆதியாகமம் 3:15-ஐ பவுல் ஏன் மறைமுகமாகக் குறிப்பிட்டார் என்பதையும் இது விளக்குகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இஸ்ரவேலுக்கும் புறஜாதி நாடுகளுக்கும் இடையிலான உறவு ஒரு சுவாரசியமான கேள்வியாகும்... ஆதியாகமம் 18 மற்றும் பிற இடங்களில் நீங்கள் பார்த்தால், தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்து, அவருடைய சந்ததியினரை ஆசீர்வதிப்பார் என்று அவருக்கு வாக்குக் கொடுக்கிறார். வேதாகமத்தை நாம் ஒரு பல செயல் நாடகமாக நினைத்தால், தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்யும் முதல் செயல் உள்ளது, மேலும் அவர் இஸ்ரவேல் தேசத்தை சுற்றியுள்ள ஜாதிகளின் ஊழல் தாக்கங்களிலிருந்து பாதுகாக்கிறார்; அவர்கள் தோல்வியடைகிறார்கள், ஆனால் அவர் அவர்களை ஒழுங்குபடுத்துகிறார். மேசியா வரும்வரை அவர் தேசத்தைப் பாதுகாக்கிறார். மேசியா வந்து இஸ்ரவேலருக்கு இரட்சிப்பை அறிவிக்கிறார். நீங்கள் மத்தேயு சுவிசேஷத்தைப் பார்த்தால், "நான் இஸ்ரவேலின் தொலைந்துபோன ஆடுகளுக்காக வந்தேன்" என்று மத்தேயு 15-ல் இயேசு கூறுகிறார். இந்த கானானிய ஸ்திரீ தன் மகளுக்காக அவரிடம் மன்றாடிக் கொண்டிருக்கிறாள். அது சில நேரங்களில் தொந்தரவாக இருக்கும். "அவர் ஏன் உடனடியாக மகளை குணப்படுத்தவில்லை?" என்று மக்கள் கேட்கிறார்கள். இயேசு சில வழிகளில், "இது இரண்டாவது செயல்" என்று கூறுகிறார். சரி தானே? "இஸ்ரவேலின் தொலைந்துபோன ஆடுகளுக்கு இரட்சிப்பை அறிவிக்க வந்தேன்" என்கிறார். ஆனால் நீங்கள் சுவிசேஷத்தின் இறுதிப் பகுதிக்கு வருகிறீர்கள், மத்தேயு 28 இல் நாம் இதைக் காண்கிறோம், நாம் செய்யும் செயல், எல்லா ஜாதிகளுக்கும், யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் செயலாகும். இப்போது, ரோமர் 1-ல், மூன்றாவது செயலில் கூட, பவுல் இந்த வேறுபாட்டைப் பேணுகிறார். அவர் "முதலில் யூதரிடம், பின்னர் புறஜாதியினரிடம்" என்று பேசுகிறார். ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களைக் கொண்ட தன் நாட்டு மக்களுக்கு அவர் செய்ய வேண்டிய கடமையை உணர்கிறார்: அவர்களுக்கு முதலில் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய கடமை எனக்கு உள்ளது என்று கூறுகிறார். எனவே அவர் ஜெபஆலயத்திற்குச் சென்று நம் முற்பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் உண்மை என்று அறிவிக்கிறார். ஆனால் அவர் ஜெபஆலயத்திலிருந்து வெளியேற்றப்படும்போது அல்லது அவர்கள் இனி அவர் சொல்வதைக் கேட்காதபோது, அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உடனடியாக புறஜாதிகளிடம் செல்கிறார். ஏனென்றால், எபேசியர் 2-ல் அவர் விவரித்தபடி, சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம், யூதருக்கும் புறஜாதியினருக்கும் இடையிலான பிரிக்கும் சுவர் உடைக்கப்படுகிறது... யூதராகவும் புறஜாதியினராகவும் தேவனுடைய வளர்ப்பு மகன்களாகவும் மகள்களாகவும் நாம் இப்போது ஒரு அழகான ஒற்றுமையைக் கொண்டிருக்கிறோம்.
>
> – Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

திருச்சபையும் உலகமும் எதிரெதிர் கொள்கைகளைப் பின்பற்றுவதால், விசுவாசிகள் இந்த உலகத்துடன் ஒத்துப்போக வேண்டாம் என்று புதிய ஏற்பாடு அடிக்கடி எச்சரிக்கிறது. ஆனால் அதே நேரத்தில், புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் திருச்சபைக்கும் உலகத்திற்கும் இடையிலான கோடு முழுமையானது அல்ல என்பதை ஒப்புக்கொண்டனர். வேதத்தில் கலாச்சாரம் வளர்ந்தபோது, ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் அவிசுவாசிகள் பின்பற்றிய பழக்கவழக்கங்கள் மற்றும் தத்துவ கண்ணோட்டங்களை ஆமோதித்தனர். இந்த ஒற்றுமைகளில் சில கிறிஸ்துவின் சீஷர்கள் மீது பாவத்தினுடைய செல்வாக்கின் விளைவாக ஏற்பட்டன, மற்ற ஒற்றுமைகள் உலகில் பொதுவான கிருபையின் நேர்மறையான விளைவுகளிலிருந்து எழுந்தன.

வேதாகம கலாச்சார வளர்ச்சிகள் மீதான நம் கவனத்தில், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தையும், வேதாகம வரலாறு முழுவதும் எதிரெதிர் கலாச்சார இலட்சியங்கள் எவ்வாறு வளர்ந்தன என்பதையும் நாம் கண்டோம். இப்போது வேதாகமத்தில் கலாச்சார பன்முகத்தன்மையின் வளர்ச்சி என்கிற நமது மூன்றாவது தலைப்பிற்கு வருவோம்: .

## வகை

நாம் பழைய ஏற்பாட்டை ஆராயும்போது, அதில் இஸ்ரவேலின் தேசிய கலாச்சாரத்தை உறுதிப்படுத்த வடிவமைக்கப்பட்ட பல சட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் உள்ளன என்பது தெளிவாகிறது. ஆனால் எல்லா இஸ்ரவேலரின் கலாச்சாரங்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார் என்பது இதன் அர்த்தமல்ல. சொல்லப்போனால், இஸ்ரவேலுக்குள் உள்ள வெவ்வேறு சமூகங்கள் தேவனுடைய விசேஷமான மற்றும் பொதுவான வெளிப்பாடுகளை உண்மையாகப் பயன்படுத்தியபோது, பலவிதமான கலாச்சார வடிவங்கள் தோன்றின.

இந்த மாறுபாடுகளில் பல ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. லேவிய ஆசாரியர்கள் தேவனுடைய சட்டங்களை தங்கள் சமூகங்களில் சில வழிகளில் பயன்படுத்தினார்கள், அதே நேரத்தில் அரசர்களும் பிற அரசியல் தலைவர்களும் தேவனுடைய சட்டங்களை வித்தியாசமாகப் பயன்படுத்தினர். ஒரு குடும்பம் தேவனுடைய சட்டங்களை அதன் உறுப்பினர்களுக்குப் பொருத்தமான வழிகளில் பயன்படுத்தியது, மற்ற குடும்பங்கள் தங்கள் உறுப்பினர்களுக்குப் பொருத்தமான வழிகளில் தேவனுடைய சட்டங்களைப் பயன்படுத்தின.

இதற்கும் அப்பால், காலப்போக்கில் தேவன் இஸ்ரவேலருக்கு மேலும் மேலும் விசேஷித்த வெளிப்பாடுகளைக் கொடுத்ததால் இன்னும் அதிகமான வேறுபாடுகள் ஏற்பட்டன. கானானை வென்றபோது வனாந்தரத்தின் வழியாக அணிவகுத்துச் செல்லும் தனது மக்களுக்கு சில கலாச்சார வடிவங்களையும் வெவ்வேறு வடிவங்களையும் தேவன் கட்டளையிட்டார். தேவன் இஸ்ரவேலில் ராஜ்யத்தை நிறுவியபோதும், எருசலேமில் ஆலயத்தைக் கட்டும்படி சாலொமோனுக்குக் கட்டளையிட்டபோதும் மாற்றங்களை ஏற்படுத்தினார். இஸ்ரவேலின் கலாச்சாரத்தில் பிற மாறுபாடுகள் நாடுகடத்தப்பட்ட காலத்திலும் நாடுகடத்தலுக்குப் பின்னரும் நிகழ்ந்தன.

> இஸ்ரேலின் பண்பாட்டு வாழ்க்கையின் சில அம்சங்கள் அவற்றின் வரலாறு முழுவதும் பெரிதாக மாறவில்லை. அவை ஆரம்பம் முதல் இறுதி வரை ஆணாதிக்க கலாச்சாரமாக இருந்தன. குடும்பத்தில் முக்கிய நபராக இருந்தவர் கணவர். எந்த வகையிலும் ஒரே உருவம் அல்ல. நீ உன் தகப்பனை மிகவும் மதி, உன் தாயைச் சபிக்காதே என்று சொல்லும் நீதிமொழிகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. ஆயினும்கூட, கலாச்சாரம் ஆரம்பம் முதல் இறுதி வரை பெரும்பாலும் **முற்**பிதா**க்களை** மையமாகக் கொண்டிருந்தது. மறுபுறம், அவர்களின் வாழ்க்கை தளர்வான குலங்களிலிருந்தும் பின்னர் மிகவும் இறுக்கமாக ஒழுங்கமைக்கப்பட்ட கோத்திர கட்டமைப்பிலிருந்தும் வியத்தகு முறையில் மாறியது, இறுதியாக தேசிய அந்தஸ்துக்கு மாறியது, பின்னர் தேசம் அழிக்கப்பட்டது, அவர்கள் ஒரு பெரிய உலக சாம்ராஜ்யத்திற்குள் வெறுமனே ஒரு கலாச்சாரமாக இருந்தனர், அப்போது தேவனுடைய மக்களாகிய நாம் யார்? என்கிற கேள்வி எழுந்தது. எனவே, அந்த அரசியல் சூழ்நிலை அந்த காலகட்டத்தில் அவர்களுக்கு மிகவும் வியத்தகு முறையில் மாறியது.
>
> – Dr. ஜான் ஆஸ்வால்ட்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் புதிய ஏற்பாட்டை நோக்கித் திரும்பும்போது மீண்டும் வேறுபாட்டைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டுப் பண்பாட்டு முறைகள் இன்னும் பொருந்துகின்றன, ஆனால் தேவனுடைய மக்கள் இனி ஒரே தேசமாக இருக்கவில்லை என்ற உண்மையின் வெளிச்சத்தில் அவற்றைப் பார்க்க வேண்டியிருந்தது. தேவனுடைய மக்கள் இப்போது திருச்சபையாக இருந்தனர், இது பல்வேறு தேசிய கலாச்சாரங்களுக்குள் வாழ அழைக்கப்பட்ட ஒரு சமூகமாகும். எனவே, நீங்கள் எதிர்பார்ப்பது போல, புதிய உடன்படிக்கை சகாப்தத்தில் தேவன் இன்னும் பெரிய கலாச்சார பன்முகத்தன்மையை வளர்க்க தம்முடைய உண்மையுள்ள மக்களை வழிநடத்தினார்.

மக்கள் மற்றும் சூழ்நிலைகளில் உள்ள வேறுபாடுகள் கிறிஸ்தவ சமூகங்கள் ஒன்றுக்கொன்று வெவ்வேறு வழிகளில் வேதாகம போதனைகளைப் பயன்படுத்த வழிவகுத்தன. எடுத்துக்காட்டாக, யூத மற்றும் புறஜாதி விசுவாசிகள் தங்கள் சூழ்நிலைகளின் அடிப்படையில் தனித்துவமான கலாச்சார நடைமுறைகளைக் கடைப்பிடித்தனர். மேலும் வெவ்வேறு பிராந்தியங்களில் அமைந்துள்ள கிறிஸ்தவ சபைகள் வேதத்தைப் பயன்படுத்தும்போது தங்கள் சொந்த மக்களையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது. மேலும் பல்வேறு குடும்பக் குழுக்கள் தேவனுடைய வார்த்தைகளை பல்வேறு வழிகளில் உண்மையோடு பின்பற்றின.

ஆனால் புதிய உடன்படிக்கை விசேஷித்த வெளிப்பாடு ஒரே நேரத்தில் நடக்கவில்லை என்பதை நினைவில் கொள்வது அவசியம். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக, தேவன் கிறிஸ்து மூலமாகவும், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும் திருச்சபைக்கான தனது சித்தத்தை வெளிப்படுத்தினார். எனவே, புதிய ஏற்பாட்டில் உள்ள திருச்சபையின் கலாச்சாரமும் காலப்போக்கில் வேறுபட்டது. உதாரணமாக, அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் அப்போஸ்தலர் 15-ல் எருசலேமில் சந்தித்தபோது விருத்தசேதனம் செய்யும் நடைமுறை வியத்தகு முறையில் மாறியது. ஒவ்வொரு முறையும் ஒரு புதிய ஏற்பாட்டு புத்தகம் எழுதப்பட்டு பெறப்பட்டபோது, பல்வேறு கிறிஸ்தவ சபைகள் மாற்றங்களைச் சந்தித்தன. இப்படிப்பட்ட பல காரணங்களால், புதிய ஏற்பாட்டு காலத்தில் கிறிஸ்தவ சமூகங்களிடையே பெரும் கலாச்சார வேறுபாடுகள் இருந்தன.

கலாச்சாரத்தின் வேதாகம அடிப்படைகளையும் வேதாகம வளர்ச்சிகள் வேதாகமத்தில் கலாச்சாரத்தை பாதித்த விதத்தையும் ஆராய்வதன் மூலம் வேதாகம கலாச்சாரம் மற்றும் நவீன பிரயோகத்தைப் பார்த்தோம், இப்போது நமது மூன்றாவது முக்கிய தலைப்பிற்கு வருவோம். வேதாகமத்தின் நவீன பயன்பாட்டைப் பற்றி இந்த பரிசீலனைகள் அனைத்தும் என்ன சொல்கின்றன?

# பிரயோகம்

நம் காலத்தில், பல சுவிசேஷகர்கள் விசுவாசத்தை முதன்மையாக ஒரு தனிப்பட்ட விஷயமாக நினைக்கிறார்கள். தேவனோடு நாம் தனிப்பட்ட முறையில் நடப்பதைப் பற்றி வேதாகமம் நிறையச் சொல்கிறது. ஆனால் நவீன கலாச்சாரத்திற்கு வேதாகமத்தின் உட்குறிப்புகளில் நமக்கு மிகக் குறைந்த ஆர்வம் உள்ளதைப் போல நம்மில் பலர் வேதத்தின் இந்த அம்சத்தை வலியுறுத்துகிறோம். ஆனால் நாம் பார்க்கப்போவது போல, வேதவாக்கியங்கள் நமது விசுவாசத்தின் கலாச்சார பரிமாணங்களை மிகவும் வலியுறுத்துகின்றன, எனவே இன்று கலாச்சாரத்தில் வேதவாக்கியங்களைப் பயன்படுத்துவதில் நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

வேதாகமத்தில் பண்பாட்டின் அடிப்படைகளையும் வளர்ச்சிகளையும் நாம் பார்த்ததைப் போலவே, கலாச்சாரத்தைப் பற்றி வேதம் கற்பிப்பதன் நவீன பிரயோகத்தையும் நாம் கருத்தில் கொள்வோம். முதலில், நாம் வேதாகமத்தைப் பயன்படுத்தும்போது கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை ஆராய்வோம். அடுத்து, இரண்டு எதிரெதிர் கலாச்சார இலட்சியங்கள் இன்று வேதாகமத்தின் பிரயோகத்தை எவ்வாறு பாதிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம். இறுதியாக, நவீன பயன்பாடு நம் காலத்திற்கு தேவன் விதித்த கலாச்சார பன்முகத்தன்மையை எவ்வாறு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பார்ப்போம். நவீன பிரயோகத்தில் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை முதலில் பார்ப்போம்.

## முக்கியத்துவம்

நவீன கலாச்சாரத்திற்கு வேதத்தைப் பயன்படுத்துவது ஏன் முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ள வேதாகமத்தின் பல பகுதிகள் நமக்கு உதவுகின்றன. ஆனால் இதைக் காண்பதற்கான எளிதான வழிகளில் ஒன்று, கிறிஸ்து தனக்குக் கட்டளையிட்டவற்றின் முழு வரம்பைக் கற்பிப்பதன் மூலம் உலகின் ஒவ்வொரு கலாச்சாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்த தனது சீஷர்களை எவ்வாறு அழைத்தார் என்பதைக் கருத்தில் கொள்வது.

மத்தேயு 28:19-20-ல் இயேசு சொன்ன விதத்தை கவனிக்கவும், கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் பிரதான கட்டளை அல்லது ”சுவிசேஷ கட்டளை” என்று அழைக்கும் பரிச்சயமான பகுதி இது. இந்த பகுதியில் இயேசு தம்முடைய சீஷர்களிடம் இவ்வாறு சொன்னார்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள் (மத்தேயு 28:19-20).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்து மகிமையில் திரும்பும் வரை அவரைப் பின்பற்றுபவர்களின் ஊழியத்தைப் பற்றி இந்த பகுதி சுருக்கமாகக் கூறுகிறது. ஆனால் இது நமது நவீன கலாச்சார முயற்சிகளுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதைப் புரிந்துகொள்ள, இந்த சுவிசேஷ ஆணை ஆதியாகமத்தின் தொடக்கத்தில் மனித இனத்திற்கு வழங்கப்பட்ட கலாச்சார ஆணையை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதைப் பார்க்க உதவுகிறது. ஆதியாகமம் 1:28-ன் பண்பாட்டு ஆணையில், தேவன் மனிதகுலத்தை "பலுகிப் பெருகி எண்ணிக்கையில் பெருகுங்கள்" என்று சொன்னார்.

இதேபோல், "நீங்கள் போய் எல்லா ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று மத்தேயு 28:19-ல், கிறிஸ்து தனது சீஷர்களை எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அழைத்தார். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சாயலால் உலகை நிரப்புவதைப் போலவே, கிறிஸ்தவர்களும் தேவனுடைய மீட்கப்பட்ட சாயல்களைப் பெருக்க வேண்டும். கிறிஸ்துவில் இரட்சிப்பை தருகிற விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மக்களை வழிநடத்துவதன் மூலம் நாம் இதைச் செய்கிறோம்.

ஆனால் இயேசுவின் சுவிசேஷ கட்டளை தேவனுடைய உண்மையுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு நின்றுவிடவில்லை. மத்தேயு 28:20-ன்படி, "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்திற்கும் கீழ்ப்படிய அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்" என்று இயேசு கூறியதை செய்வதும் நமது பணியாகும். ஆதாமும் ஏவாளும் பூமியை நிரப்பி, அதை ஆள்வதன் மூலம் தேவனுக்குக் கீழ்ப்படிய அழைக்கப்பட்டதைப் போலவே, கிறிஸ்தவர்களும் தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றுவதன் மூலம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை அனைத்து தேசங்களுக்கும் கற்பிக்க வேண்டும், அதில் கலாச்சாரத்தைப் பற்றிய அம்சங்களும் அடங்கும்.

அதை நாம் இப்படிப் பார்க்கலாம்: ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பூமியை அடக்கி பண்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தேசங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதன் மூலமும், எல்லா ஜாதிகளுக்கும் தனது கட்டளைகளை கற்பிப்பதன் மூலமும் தன்னைப் பின்பற்றுபவர்கள் ஒவ்வொரு கலாச்சாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இயேசு எதிர்பார்த்தார் என்பது மத்தேயு 28 இலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவரது போதனைகள் வறுமை, நிதி, சுகாதாரம், திருமணம், நீதி, இனம், அரசியல் மற்றும் வரி செலுத்துதல் போன்ற மிகவும் பொது கலாச்சார பிரச்சனைகளை நிவர்த்தி செய்தன. அதனால்தான் புதிய ஏற்பாட்டு நூல்கள் பரந்த அளவிலான பண்பாட்டுப் பிரச்சனைகளைத் தொடுவதைக் காண்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதே வழிகளில், மத்தேயு 5:13-14-ல், கிறிஸ்து தைரியமாக தனது சீஷர்களைப் பற்றி இவ்வாறு விவரித்தார்:

> பூமியின் உப்பு … [மற்றும்] … உலகின் ஒளி என்று கூறினார் (மத்தேயு 5:13-14).

வரலாறு மீண்டும் மீண்டும் காட்டியுள்ளபடி, கிறிஸ்து ஒவ்வொரு நாட்டிற்கும் கட்டளையிட்ட அனைத்தையும் கற்பிப்பதில் இயேசுவின் சீஷர்கள் தங்களை உண்மையாக அர்ப்பணிக்கும்போது, முழு உலகிலும் உள்ள ஒவ்வொரு கலாச்சாரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நேர்மறையாக பாதிக்கும் ஆற்றலை நாம் கொண்டுள்ளோம். இந்த காரணத்திற்காக, வேதத்தின் நமது நவீன பிரயோகம் மனித கலாச்சாரத்தின் முழு வரம்பை நிவர்த்தி செய்ய வேண்டும்.

> மத்தேயு 5-ல் இயேசு தம்முடைய சீஷர்கள் பூமியின் உப்பாகவும் உலகத்தின் ஒளியாகவும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒரு நவீன வாசகனுக்கு, இது ஒரு மர்மமான கூற்று… பண்டைய வாசகர்களுக்கு, குறிப்பாக வேதாகமத்தில் உள்ள கலாச்சாரத்தில் வேரூன்றியிருக்கிற அந்த மொழி எதைக் காட்டுகிறது என்றும் நீங்கள் நினைக்கிறீர்கள்? மேலும் உப்பு என்பது பொருட்கள் அழுகாமல் பாதுகாக்கும் ஒன்று, எனவே அழுகாமல் இருக்கவும், பாதுகாக்கவும் இறைச்சி அல்லது மீன்களில் உப்பு சேர்க்கப்பட்டது, மேலும் இது சுவையைக் கூட்டியது. நீங்கள் கிறிஸ்தவர்களைப் பற்றி நினைக்கிறீர்கள். உலகில் அவர்களின் தாக்கமானது தேவனுடைய கருவியின் கீழ் பல வழிகளில் நீதியின் இருப்பாக இருக்க வேண்டும், கலாச்சாரத்தைப் பாதுகாக்க வேண்டும் அல்லது தேவனுடைய சத்தியத்தின் முன்னிலையில் கலாச்சாரத்தை சுவைக்க வேண்டும். வெளிச்சமானது அதையும் தெளிவாக படம் பிடிக்கிறது. வேதாகமம் முழுவதிலும் வெளிச்சமானது வெளிப்பாட்டின் உருவமாக, பார்க்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் தேவன் யார் என்பதை வெளிப்படுத்தி, அவர் யார் என்ற உண்மையையும் நீதியையும் கொண்டு இருண்ட உலகத்தை ஒளிரச் செய்ய வேண்டும்.
>
> — Dr. ராபர்ட் எல். ப்ளம்மர்

நவீன பிரயோகம் மற்றும் வேதாகம கலாச்சாரம் பற்றிய நமது ஆய்வில், இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு கலாச்சாரத்தின் முக்கியத்துவம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்னவென்று கண்டோம். இப்போது நமது இரண்டாவது தலைப்பைப் பார்ப்போம். எதிரெதிர் பண்பாட்டு இலட்சியங்களின் இருப்பு வேதத்தின் நமது நவீன பயன்பாட்டை எவ்வாறு பாதிக்க வேண்டும்?

## எதிர்ப்பு இலட்சியங்கள்

கிறிஸ்து பூமிக்கு வந்தபோது, சாத்தானுக்கு எதிரான தனது மகத்தான வெற்றியின் இறுதி கட்டத்தைத் தொடங்கினார். ஆனால் கிறிஸ்து எல்லாவற்றையும் முடித்து மகிமையோடு திரும்பும்போதுதான் இந்த வெற்றி முழுமையடையும். இதற்கிடையில், அவரது ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது, மனித இனம் தேவனுக்கு எதிரான கலகத்தின் கலாச்சார லட்சியத்தைப் பின்பற்றும் விசுவாசமற்ற உலகமான சர்ப்பத்தின் சந்ததியினருக்கும், தேவனுக்கு சேவை செய்யும் கலாச்சார லட்சியத்தைப் பின்பற்றும் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஏவாளின் சந்ததியினருக்கும் இடையில் தொடர்ந்து பிளவுபட்டுள்ளது.

ஆனால், வேதாகம காலத்தில் இருந்தது போல, தேவனுடைய மக்களுக்கும் உலகத்திற்கும் இடையிலான கோடு முழுமையானது அல்ல. கிறிஸ்து திரும்பி வரும்வரை, பூமியில் உள்ள அவரது மக்கள் பாவத்தின் எஞ்சிய செல்வாக்கோடு தொடர்ந்து போராடுவார்கள். நாம் பாவத்தின் கொடுங்கோன்மையிலிருந்து விடுபட்டிருக்கிறோம், ஆனால் அதன் தாக்கத்திலிருந்து விடுபடவில்லை. அதே நேரத்தில், தேவனுடைய பொதுவான கிருபை இன்னும் உலகத்தை கட்டுப்படுத்துகிறது, இதனால் அவிசுவாசிகள் கூட பெரும்பாலும் ஓரளவிற்கு தேவனின் சித்தத்திற்கு இணங்கக்கூடிய வழிகளில் வாழ்கிறார்கள். சுவிசேஷத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தேசங்களுக்கு இது குறிப்பாக உண்மையாகும்.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, தேவனுடைய சித்தத்திற்கு உண்மையாக இருக்கும் கலாச்சார பாதைகளைப் பின்பற்றுவதும், இல்லாதவற்றைத் தவிர்ப்பதும் நமது பொறுப்பாகும். சில நேரங்களில் நாம் பின்பற்றும் பாதைகள் உலகின் பாதைகளிருந்து மிகவும் வேறுபட்டதாக இருக்க வேண்டும். விக்கிரக வழிபாடு, பாலியல் ஒழுக்கக்கேடு, சுயநலம், கர்வம், அநீதி மற்றும் பல கலாச்சார தீமைகளில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்று வேதாகம ஆசிரியர்கள் தங்கள் அசல் வாசகர்களை மீண்டும் மீண்டும் எச்சரித்தனர். நம் காலத்தில் இது போன்ற தீமைகளை நாம் எங்கு கண்டாலும், அவற்றை விட்டு விலகிச் செல்ல வேண்டும்.

ஆனால் மற்ற நேரங்களில், வேதாகம ஆசிரியர்கள் சமூக உறவுகள், தொழில்நுட்பம், கலை, இசை, கட்டிடக்கலை, சட்டம் மற்றும் அரசியல் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களில் பொதுவான கிருபையின் தாக்கத்தை அங்கீகரிக்க தங்கள் அசல் வாசகர்களை ஊக்குவித்தனர். அவிசுவாசிகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாழ்ந்த விதங்களை வேதாகமம் அங்கீகரிக்கிறது என்பதை நாம் காணும் ஒவ்வொரு முறையும், இன்று உலக கலாச்சாரங்களில் தேவனுடைய பொதுவான கிருபையின் இதேபோன்ற விளைவுகளை நாம் தேட வேண்டும். வேதாகமத்தின் போதனைகளுக்கு நாம் உண்மையாக இருக்கும் வரை, விஞ்ஞானம், கலை, அரசியல் மற்றும் வாழ்க்கையின் பிற அம்சங்களில் பொதுவான கிருபையின் ஆசீர்வாதங்களை நாம் தாராளமாக அங்கீகரிக்க வேண்டும்.

வேதாகமத்தில் உள்ள கலாச்சார வடிவங்கள் நம் நாளுக்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதைப் புரிந்துகொள்வது சில நேரங்களில் நமக்கு கடினமாக இருக்கலாம். ஆனால் பொதுவாக, தேவன் வேதம் முழுவதும் கலாச்சாரத்தின் பல்வேறு பரிமாணங்களை வழிநடத்திய விதங்களை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களைப் பற்றி வேதாகமம் வெளிப்படுத்தும் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தேவன் பண்பாட்டு வடிவங்களை வழிநடத்திய குறைந்தது நான்கு வழிகளைக் காண்கிறோம். திருமணம் மற்றும் வேலை போன்ற சில முறைகளை அவர் நிரந்தரமாக அங்கீகரித்தார். எகிப்திலிருந்து கானானுக்கு இஸ்ரவேல் கோத்திரங்கள் அணிவகுத்துச் சென்றபோது அவர்கள் ஏற்பாடு செய்த பிற வடிவங்களை அவர் தற்காலிகமாக மட்டுமே வழிமொழிந்தார். சில சமயங்களில், பாவிகளுடனான பொறுமையில், பலதார மணம் மற்றும் அடிமைத்தனம் போன்ற தனது மக்களின் சில கலாச்சார நடவடிக்கைகளை தேவன் தற்காலிகமாக சகித்துக்கொண்டார். நிச்சயமாக, வேதாகமம் முழுவதிலும், அநீதி மற்றும் விக்கிரக வழிபாடு போன்ற தேவனுடைய நிரந்தர நிராகரிப்பைப் பெற்ற பல கலாச்சார வடிவங்களை நாம் காண்கிறோம்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வேதத்தில் நாம் காணும் ஒரு கலாச்சார மாதிரியை இன்று நம் வாழ்க்கையில் பயன்படுத்த, வேத பகுதியிலேயே தேவனின் மதிப்பீட்டை நாம் தேட வேண்டும். பின்னர், மற்ற வேதாகமப் பகுதிகளிலிருந்து பொருத்தமான தார்மீக தரநிலைகளைத் தேட வேண்டும் மற்றும் நாம் காணும் வேத கலாச்சார கூறுகளுக்குப் பின்னால் உள்ள உந்துதல்களையும் இலக்குகளையும் தீர்மானிக்க வேண்டும். இந்த வழிகளில், வேதப் பகுதிகளில் உள்ள கலாச்சார வடிவங்கள் தேவனுக்கு சேவை செய்தல் அல்லது அவருக்கு எதிரான கலகம் ஆகிய இரண்டு முரண்பட்ட கலாச்சார இலட்சியங்களை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். நாம் இதைச் செய்யும்போது, வேதத்தில் உள்ள கலாச்சாரத்தின் பொருத்தமான வடிவங்களை நமது நவீன உலகில் பிரயோகிக்க முடியும்.

பண்பாட்டினுடைய முக்கியத்துவத்தின் வெளிச்சத்திலும், இன்றைய உலகில் நிலவும் எதிர்மறையான பண்பாட்டு இலட்சியங்களின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெளிச்சத்திலும் நவீன பிரயோகத்தைப் பார்த்த பிறகு, நாம் இப்போது மூன்றாவது பரிசீலனைக்கு திரும்பலாம். நம்முடைய நாளில் வேதாகமத்தைப் பிரயோகிக்கும்போது, கலாச்சார வேறுபாடுகளை நாம் எப்படிக் கையாள வேண்டும்?

## வகை

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள வெவ்வேறு விசுவாசிகளை நாம் சந்திக்கும்போது, நமது மொழிகள், உடை பாணிகள், உணவுகள், இசை மற்றும் பல கலாச்சார வடிவங்கள் மிகவும் வித்தியாசமாக இருக்கும் என்பது தெளிவாகிறது. இது ஏன் உண்மை? நாம் அனைவரும் வேதாகமத்தின் நியமங்களைப் பின்பற்ற முற்படுகிறோம் என்றால், நமது கலாச்சாரங்களின் வடிவங்கள் ஏன் பல திசைகளில் செல்கின்றன? நாம் அனைவரும் வேதாகமத்திற்கு உண்மையாக இருக்கும் வழிகளில் வாழத் தவறுவதால், நம்மிடைய சில வேறுபாடுகள் உள்ளன என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் நம்முடைய தோல்விகளைத் தவிர, உலகெங்கிலும் உள்ள தேவனுடைய மக்களிடையே கலாச்சார பன்முகத்தன்மையை எதிர்பார்ப்பதற்கு பல நியாயமான காரணங்கள் உள்ளன.

நாம் பார்த்தபடி, புதிய உடன்படிக்கை யுகத்தின் தொடக்கத்துடன், தேவனுடைய மக்கள் இனி ஒரே தேசமாக இருக்கவில்லை. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, சுவிசேஷம் உலகம் முழுவதும் மேலும் மேலும் பரவியுள்ளதால், தேவனுடைய உண்மையுள்ள மக்கள் அதிகரித்து வரும் மாறுபட்ட கலாச்சாரங்களில் கிறிஸ்துவுக்காக வாழும் சவாலை எதிர்கொண்டுள்ளனர். இந்த சவால் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. நாம் எவ்வளவு கலாச்சார பன்முகத்தன்மையை அனுமதிக்க வேண்டும்? நாம் என்ன வரம்புகளை அமைக்க வேண்டும்?

இந்த கேள்வியை நிவர்த்தி செய்ய வேதாகமத்தில் பல இடங்கள் உள்ளன, ஆனால் இந்த பிரச்சனையை ஆராய்வதற்கான சிறந்த இடங்களில் ஒன்று 1 கொரிந்தியர் 9:19-23 ஆகும். இந்த பகுதியில் பவுல் கொரிந்து திருச்சபையிடம் பின்வருமாறு கூறினார்:

> நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்

> போலவுமானேன். நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன். பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன். சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன் (1 கொரிந்தியர் 9:19-23).

சுவிசேஷ ஆணையை நிறைவேற்றுவதற்கான தனது அர்ப்பணிப்பு அவரை பரந்த அளவிலான கலாச்சார கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளைத் தழுவுவதற்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை இந்த பகுதியில் பவுல் விவரித்தார். அதை அவர் 22-ம் வசனத்தில் சுருக்கமாகக் கூறுகிறார்: ”எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.”

அங்கும் இங்கும் பயணம் செய்தவர் என்ற முறையில், பவுல் அசாதாரணமான அளவு கலாச்சார நெகிழ்வுத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. ”நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன்” என்று 20 ம் வசனத்தில் கூறினார். மேலும் 21-ம் வசனத்தில், அவர் புறஜாதி சமூகங்களில் இருந்தபோது ”நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போல ஆனார்” என்று கூறினார்.

ஆனால், பவுல் எப்படித் தழுவிக் கொள்ளத் தயாராக இருந்த பண்பாட்டுப் பல்வகைமைக்கு வரம்புகளை விதித்தார் என்பதைக் கவனியுங்கள். 20-ம் வசனத்தில், ”நான் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒருவனைப் போல் ஆனேன் (நானே பிரமாணத்தின் கீழ் இல்லை என்றாலும்)” என்றார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பவுல் யூத சமூகங்களின் கலாச்சார வடிவங்களைப் பின்பற்றினார், ஆனால் அவரது காலத்தின் மதத் தலைவர்கள் அதைப் புரிந்துகொண்டதால் அவர் சட்டத்திற்குக் கட்டுப்படவில்லை. பவுலின் காலத்தில் பெரும்பாலான பரிசேயர்களும் மதத் தலைவர்களும் தங்கள் சுய நீதியை வெளிப்படுத்த மட்டுமே நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்தினர். ஆனால், மத்தேயு 23-ல் இயேசு சுட்டிக்காட்டியபடி, இந்த நடத்தை தண்டனைக்கும் மரணத்திற்கும் வழிவகுத்தது. இங்கே, பண்பாட்டுத் தரங்களைத் தழுவாமல்

கலாச்சாரத்தைத் தழுவிக்கொண்டதாக பவுல் விளக்கினார், அது இறுதியில் அவரை தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் கொண்டு வரும்.

அதேபோல், 21-வது வசனத்தில், "நான் நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போல ஆனேன் (நான் தேவனுடைய நியாயப்பிரமாணத்திலிருந்து விடுபடவில்லை என்றாலும், கிறிஸ்துவின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கிறேன்) என்றார். புறஜாதி சமூகங்களின் கலாச்சாரக் கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளில் பவுல் பங்கெடுத்தார், ஆனால் கிறிஸ்து தனது புதிய உடன்படிக்கை மக்களுக்காக விளக்கியதைப் போல அவர் தேவனுடைய சட்டத்தை மீறாத அளவில் அதை செய்தார்.

அதேபோல், இன்று சுவிசேஷ கட்டளையை நிறைவேற்ற, கிறிஸ்துவின் உண்மையுள்ள சீஷர்கள் மற்ற கலாச்சார பின்னணிகளிலிருந்து மக்களையும் சூழ்நிலைகளையும் சந்திக்கும் போதெல்லாம் வேதவசனங்களை வித்தியாசமாக பயன்படுத்த தயாராக இருக்க வேண்டும். உள்ளூர் சபைகள், கிறிஸ்தவ வணிகங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் நட்புகள் கூட ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கும். காலப்போக்கில், சம்பந்தப்பட்ட மக்கள் மற்றும் சூழ்நிலைகளும் மாறும்போது, இந்த சமூகங்கள் மாறும்.

ஆனால் நமது சமூகங்களின் கலாச்சாரங்களை நாம் விரும்பும் வழியில் வடிவமைக்க நமக்கு சுதந்திரம் உள்ளது என்று அர்த்தமல்ல. மாறாக, அப்போஸ்தலனாகிய பவுலைப் போலவே, இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களும் வேதாகமத்தின் அளவுருக்களுக்குள் இருக்க உறுதியாக இருக்க வேண்டும். வேதாகமங்களை வெவ்வேறு வழிகளில் நம் சமூகங்களுக்குப் பயன்படுத்தும்போது, வேதவசனங்களுக்கு உண்மையாக இருப்பதற்கான இந்த அர்ப்பணிப்பு நவீன பிரயோகத்தின் மிகவும் சிக்கலான அம்சங்களில் ஒன்றாகும்.

> தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்துகையில், இடத்திலும் காலத்திலும் அதைச் செய்கிறார். அது அவருடைய வெளிப்பாட்டின் மகிமை மற்றும் அவரது மீட்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பழைய ஏற்பாட்டு சகாப்தம் முதல் புதிய ஏற்பாட்டு சகாப்தம் வரை நாம் பணியாற்றும்போது, நாம் பல்வேறு கலாச்சாரங்களுடன், வெவ்வேறு காலகட்டங்களில் உள்ள மக்களுடன் தொடர்பு கொள்கிறோம். வரலாற்றின் சில இடங்கள், கலாச்சாரங்கள் மற்றும் பின்னணிகளின் அடிப்படையில் சில இடங்களுடன் பிணைக்கப்பட்ட அனைத்து வகையான கலாச்சார வகைகளும் உள்ளன. எந்த வகை நமக்குப் பொருந்தும், அது எப்படி வாழப்பட

> வேண்டும் என்பதை நாம் எப்படி அறிவது? முதலில் நாம் சில தார்மீகக் கோரிக்கைகளின் தரத்தின் அடிப்படையில் பன்முகத்தன்மையை மதிப்பீடு செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன். சில கலாச்சார வகைகள் நிராகரிக்கப்பட வேண்டும், ஏனென்றால் அது தேவன் நம்மை எவ்வாறு படைத்துள்ளார் - அவரது தார்மீக தரநிலைகள் என்ன, மற்றும் அந்த நடைமுறைகள் என்ன என்று அவை பிரதிபலித்தாலும் பண்பாட்டு வேறுபாடு உருவ வழிபாட்டையும் தேவன் மற்றும் அவரது தரநிலைகளை நிராகரிப்பதையும் பிரதிபலிக்கலாம்.
>
> – Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

வேத வரலாறு முழுவதும், தேவனுடைய உண்மையுள்ள மக்களின் ஒவ்வொரு சமூகமும் சில கலாச்சார வடிவங்களைப் பராமரித்து வந்தது. ஆனால் காலப்போக்கில் மற்ற கலாச்சார வடிவங்கள் மாறின. வேதத்தில் நாம் காணும் கலாச்சாரத்தின் எந்த வடிவத்தையும் நாம் எவ்வளவு நெருக்கமாக பின்பற்ற வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கான ஒரு வழி, ஒரு குறிப்பிட்ட கலாச்சார அம்சம் வேதாகமம் முழுவதும் ஒரே மாதிரியாக இருந்ததா அல்லது வெவ்வேறு காலகட்டங்கள், மக்கள் அல்லது சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்டதா என்பதில் கவனம் செலுத்துவதாகும்.

வேதாகமத்தில் பண்பாட்டு வடிவங்கள் மாறினால், அவை நம் காலத்திலும் மாறக்கூடும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். ஆனால் வேதாகம வரலாறு முழுவதும் பண்பாட்டின் அம்சங்கள் ஒரே மாதிரியாக இருந்தன என்றால், அவற்றை நாம் இன்று நமக்கான தரநிலைகளாகக் கருத வேண்டும்.

எடுத்துக்காட்டாக, கடந்த 2,000 ஆண்டுகளில் குடும்பக் கட்டமைப்புகளும் வாழ்க்கைச் சூழ்நிலைகளும் மாறிவிட்டன, ஆனால் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியுமாறு வேதம் தொடர்ந்து குழந்தைகளுக்கு அறிவுறுத்துகிறது. இது இன்றும் நமக்கு உண்மையே. சட்ட அமைப்புகள் கலாச்சாரத்திற்கு காலாச்சாரம் மற்றும் சகாப்தத்திற்கு சகாப்தம் வேறுபட்டிருந்தாலும், தேவனுடைய மக்கள் சாட்சியளிக்க அழைக்கப்படும்போது நேர்மையான சாட்சிகளாக இருக்க வேண்டும் என்ற உண்மையை வேதாகமம் ஒருபோதும் மாற்றவில்லை. அரசியல் அமைப்புகள், உடைகள், இசை, உணவு விருப்பங்கள் மற்றும் கலாச்சாரத்தின் பல அம்சங்கள் வேதாகம வரலாறு முழுவதும் மாறின, ஆனால் நம் குடும்பங்கள், பணியிடங்கள் மற்றும் சமூகங்களில் தேவனை மதிக்கவும் சேவை செய்யவும் உத்தரவு சீராக உள்ளது.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாம், ஒவ்வொரு முறையும் வேதாகமத்தில் ஒரு கலாச்சார மாதிரியை நம் நாளுக்குப் பயன்படுத்தும்போது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த தொடர்ச்சிகளையும் இடைநிறுத்தங்களையும் வேறுபடுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும்.

# முடிவுரை

இந்த பாடத்தில், வேதாகம கலாச்சாரம் மற்றும் நவீன பயன்பாட்டின் பல முக்கியமான பரிமாணங்களை நாம் ஆராய்ந்தோம். பண்பாட்டின் வேதாகம அடித்தளங்களை வேதத்தின் ஆரம்ப அத்தியாயங்களில் பார்த்தோம். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கலாச்சாரத்தில் நிகழ்ந்த வேத வளர்ச்சிகளைப் பார்த்தோம். வேதத்தில் உள்ள கலாச்சாரத்தின் அம்சங்கள் வேதாகமத்தின் நவீன பயன்பாட்டை எவ்வாறு பாதிக்க வேண்டும் என்பதை நாம் ஆராய்ந்தோம்.

கிறிஸ்துவின் உண்மையுள்ள சீஷர்கள் வேதாகமத்தின் போதனைகளை தனிநபர்களாக தங்களுக்கு மட்டுமல்ல, தங்கள் வாழ்க்கையின் கலாச்சார பரிமாணங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்பதை வேதமே தெளிவுபடுத்துகிறது. புதிய உடன்படிக்கையின் சகாப்தத்தின் போது கூட, நாம் இன்னும் தேவ சாயல்களாக இருக்கிறோம், தேவனுக்குப் பிரியமான வழிகளில் மனித கலாச்சாரத்தைக் கட்டமைக்க நாம் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்து திரும்பி வரும் வரை இந்த கட்டளை நடைமுறையில் தொடரும். எனவே, நவீன கலாச்சாரத்தின் ஒவ்வொரு பரிமாணத்திற்கும் வேதாகமம் எவ்வாறு பொருந்துகிறது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.